# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2083/11 - 2018 අගෝස්තු මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.09

*2083/11 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு இரத்மலானை - மொரட்டுவை கழிவு நீர் மீள் சுழற்சிக் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் இலக்கம் 06 நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக மாற்றீடான காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2018, ஓகத்து 03.*

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தின், மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 552A - உயன தெற்கு கிராம அலுவலர் பிரிவில், உயன கிராமத்தில் அமைந்துள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 21 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதிகள் :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | உயன குறுக்கு ஒழுங்கை ; |
| கிழக்கு | : | திரு. எப். எச். எம். எப். சில்வா அவர்கள் உரிமை கோருகின்ற இலக்கம் 82/18 உடைய வீட்டுக் காணி ; |
| தெற்கு | : | உரிமையாளரைத் தெரியாத வீட்டுக் காணி ; |
| மேற்கு | : | 10 ஆம் இலக்கத்தையுடைய வீட்டுக் காணி. |

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.*

*08-796*


1A - G 28239 — 18 (2018/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*